## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

***14th ஜூன் / June 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. ஜூலியட் நெல்சன்**<br>Mrs. Juliet Nelson |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. ஜூலியட் நெல்சன்**<br>Mrs. Juliet Nelson |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

### இயேசுவே உம்மை தியானித்தால்

*1. இயேசுவே உம்மை*
*தியானித்தால்*
*உள்ளம் கனியுமே*
*கண்ணார உம்மைக் காணுங்கால்*
*பரமானந்தமே*

*2. மானிட மீட்பர் இயேசுவின்*
*சீர் நாமம்போலவே*
*இன் கீத நாதம் ஆய்ந்திடின்*
*உண்டோ இப்பாரிலே?*

*3. நீர் நொறுங்குண்ட நெஞ்சுக்கு*
*நம்பிக்கை ஆகுவீர்;*
*நீர் சாந்தமுள்ள மாந்தர்க்கு*
*சந்தோஷம் ஈகுவீர்.*

*4. கேட்போர்க்கும்*
*தேடுவோர்க்கும் நீர்*
*ஈவீர் எந்நன்மையும்;*
*கண்டடைந்தோரின் பாக்கிய சீர்*
*யார் சொல்ல முடியும்?*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் *24*ம் ஞாயிறு**<br>***"சங்கீதம் 72"*** | **சபையார் இணைந்து**<br>Congregation |

***"நீதி நியாயம் செழித்தோங்க"***

Psalter Reading "Psalm 72"

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### ஏற்றுக்கொண்டருளுமே, தேவா

**ஏற்றுக்கொண்டருளுமே, தேவா! இப்போ**
**ஏழையேன் ஜெபத்தை யேசுவின் மூலம்.**

*1சாற்றின ஆதி ஆயத்த ஜெபமும்,*
*சாந்தமாய் ஜெபித்த பாவ அறிக்கையும்,*
*தேற்றிக்கொண்டருளும் மன்னிப்பின் மருவும்*
*திவ்விய பாதத்தில் வைக்கிறேன், ஸ்வாமி. - ஏற்றுக்*

*2. குறைவுண்டு இதிலே, அருமைப் பிதாவே*
*குற்றம் மன்னித்திடும் யேசுவின் மூலம்;*
*முறைப்படி கேட்க நான் தெரியாத பாவி;*
*முழுதும் மேசையாமேல் வைக்கிறேன் ஸ்வாமி.- ஏற்றுக்*

*3. மறுரூப ஆவி வேண்டுமென் ஸ்வாமி;*
*மனமெல்லாம் புதிதாக்கிடும் ஸ்வாமி*
*சிறுமைப்பட்டடியேன். கேட்கிறேன் ஸ்வாமி;*
*தேற்றிடும், புதுப் பெலன் ஊற்றிடும் ஸ்வாமி. – ஏற்றுக்*

*4. விசுவாசம் பெருகி நிலைத்திடச் செய்யும்;*
*வெளிப்படும் மறைபொருள் பலப்படச் செய்யும்*
*கிசுவைப்போல் மறுபடி பிறந்திடச் செய்யும் .*
*தேவாவி என்னுளந் தங்கிடச் செய்யும் – ஏற்றுக்*

| | |
|---|---|
| ✝ **பூலோகத்தாரே யாவரும்**<br>Doxology | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **திருமறைப் பாடம்**<br>***எஸ்தர் 4 : 15 – 17***<br>Scripture Reading<br>Esther 4 : 15 – 17 | **மாஸ்டர். ஜோசுவா பிரின்ஸ்**<br>Master.Joshua Prince |
| **அருளுரை**<br>Sermon | **மறைதிரு. ஆர்.பிரபு**<br>Rev. R. Prabhu |
| ✝ **அர்ப்பணகீதம்**<br>Offertory & Closing Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

## ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா

*1.* ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச்செய்வீர்

**ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்**
**ஜீவியத்திற்கிதுவே சட்டம்**

*2.* ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்வீர்

*3.* ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு
வாகானதாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக்கொள்வோம்

*4.* இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசிமட்டும் காத்திருப்போம்.

**அறிவிப்புகள்**
Announcements

**மனப்பாட வசனம்** — **சபையார் இணைந்து**
✝ Memory Verse — Congregation
***எஸ்தர் 4 : 14***
Esther 4 : 14

***24. நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச்சொன்னான்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**